**செய்தி வெளியீடு எண்: 431** **நாள்: 04.07.2018**

**செய்தி வெளியீடு**

தமிழகத்தில் **88** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், **484** தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் மாணவ / மாணவியர் சேர்க்கை ஆண்டு தோறும் ஜுன் /ஜுலை மாதங்களில் நடைபெறும். இந்த ஆண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 24891 இடங்களுக்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் **50%** அரசு ஒதுக்கீட்டின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 9244 இடங்களுக்கும் இணையதளம் மூலம் கலந்தாய்வு அனைத்து மாவட்டங்களிலும் இன்று முதல் துவங்குகிறது. இப்பயிற்சி இடங்களில் சேருவதற்கு **63171** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும் கலந்தாய்வு மூலம் அங்குள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**04.07.2018** அன்று சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெற்றது. அதில் மாணவ / மாணவியர் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான தொழிற்பயிற்சி நிலையத்தையும் / தொழிற் பிரிவையும் தேர்ந்தெடுத்தனர். **05.07.2018** முதல் **19.07.2018** வரை பொது பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெற உள்ளது.

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நடைபெற்ற மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு பெற்ற மாணவ / மாணவியருக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் அவர்கள் சேர்க்கை ஆணைகளை வழங்கினார்கள்.

அப்போது தொழிலாளர் நலத்துறை முதன்மை செயலர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**